(சாட்சி மீண்டும் அழைக்கப்பட்டு சத்தியபிரமாணம் செய்து வைக்கப்பட்டு 2,3 எதிர்மனுதாரர்கள் தரப்பில் குறுக்குவிசாரணை

எனக்கு சொந்த ஊர் அகரக்கட்டு ஆகும். விபத்து நடந்த போது நான் செங்கோட்டை பேருந்து கழகத்தில் நடத்துனராக வேலை செய்து வந்தேன். தற்போதும் நான் செங்கோட்டை கிளையில் தான் வேலை செய்து வருகிறேன். விபத்து நடந்த போது எனக்கு சம்பளம் ரூ.22,674/-மாதம் பெற்று வந்ததாக மனுவில் சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். தற்போது எனது சம்பளம் ரூ.42,000/-ம் வாங்கி கொண்டிருக்கிறேன். விபத்து நடந்த போது எனக்கு வயது 45 என்றால் சரிதான். விபத்து ஆய்க்குடி டு தென்காசி ரோட்டில் சாய்பாபா கோவிலுக்கு வடபக்கம் நடந்தது என்றால் சரிதான். விபத்து நடந்த இடம் சற்று வளைவான இடமாகும். நான் வடக்கில் இருந்து தெற்கு நோக்கி வந்து கொண்டிருந்தேன் என்றால் சரிதான். 1ம் எதிர்மனுதாரரின் வேன் தெற்கில் இருந்து வடக்கு நோக்கி வந்தது என்றால் சரிதான். வளைவில் எதிரே வரும் வாகனம் தெரியாது என்றால் சரியல்ல.ஒரளவு தெரியும். நான் வந்த வேகத்தில் எதிரே வந்த 1ம்எதிர்மனுதாரர் வண்டி மீது மோதி விட்டேன் என்றால் 1ம் எதிர்மனுதாரர் ஆட்டோவை முந்தி சென்றதால் விபத்து ஏற்பட்டது. நான் தான் முந்தி சென்று 1ம் எதிர்மனுதாரர் வாகனம் மீது மோதிவிட்டேன் என்றால் சரியல்ல. 1ம் எதிர்மனுதாரர் தான் என் மீது தென்காசி காவல்நிலையத்தில் புகார் கொடுத்து என் மீது தென்காசி காவல் நிலையத்தில் முதல்தகவல் அறிக்கை பதிவு செய்யப்பட்டுள்ளது என்றால் சரிதான். விபத்தின்போது நான் அரசு மருத்துவமனையில் சிகிச்சையில் இருந்த போது எனக்கு எதிராக முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யப்பட்டது. 1ம் எதிர்மனுதாரர் கொடுத்த புகாரை விசாரணை செய்த காவல்துறை அதிகாரி என்மீது தான் குற்ற பத்திரிக்கை தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால் அது எனக்கு தெரியாது. குற்ற வழக்கு தென்காசி நீதித்துறை நடுவர் நீதிமன்றத்தில் நிலுவையில் உள்ளது என்றால் சரிதான். என் மீது

கொடுத்த புகாரை ரத்து செய்யகோரி நான் சட்ட மேல்நடவடிக்கை எடுக்கவில்லை என்றால் சரிதான். குற்ற வழக்கை நடத்தி வருகிறேன். என் கவனக்குறைவால் விபத்து ஏற்பட்டுள்ளதால் தான் நான் எவ்வித மேல்நடவடிக்கையும் எடுக்கவில்லை என்றால் சரியல்ல. 1ம் எதிர்மனுதாரர் மீது எவ்வித குற்ற வழக்கும் பதிவு செய்யவில்லை என்பதால் 2ம் எதிர்மனுதாரர் எனக்கு எவ்வித இழப்பீடும் கொடுக்க கடமைப்பட்டவர் அல்ல என்றால் சரியல்ல. 3ம் எதிர்மனுதாரரை பொறுத்தவரை நான் 3ம் நபர் இல்லை என்பதாலும், நான் வாகன உரிமையாளர் என்பதாலும் நான் இழப்பீடு கோர முடியாது என்று சொன்னால் சரியல்ல. 3ம் எதிர்மனுதாரர் எவ்விதஇழப்பீடும் கொடுக்க கடமைப்பட்டவர் அல்ல என்றால் சரியல்ல. விபத்துக்கு பின்பு நான் மயக்க நிலையில் இருந்ததாகவும் 1ம் எதிர்மனுதாரர் என் மீது புகார் கொடுத்துவிட்டதாக மனுவில் சொல்லியுள்ளது உண்மையில்லை என்றால் சரியல்ல. அரசு மருத்துவமனையில் என் சார்பாக புகார் கொடுத்திருப்பார்கள் என்று நினைத்தேன் என்று சொல்வது பொய் என்றால் சரியல்ல. எனக்கு ஏற்பட்ட காயம் தற்போது குணமாகிவிட்டது என்றால் சரியல்ல. எனக்கு காயம் குணமாகிவிட்டதால் நான் நடத்துனர் பணியை செய்து வருகிறேன் என்றால் சரியல்ல. தற்போதும் எனக்கு காயம் இருப்பதாக சொல்வது வழக்கிற்காக பொய்யாக சொல்லுகிறேன் என்று சொன்னால் சரியல்ல. ம.சா.ஆ12 ஆவணத்தில் மருத்துவரின் பெயர், கேசியர் பெயர் மற்றும் முத்திரைவில்லை இல்லாததால் அது செல்லதக்கது அல்ல என்றால் சரியல்ல. ம.சா.ஆ3, ம.சா.ஆ10 முதல் ம.சா.ஆ15, ம.சா.ஆ18 ஆகிய ஆவணங்கள் இந்த வழக்கிற்காக உற்பத்தி செய்யப்பட்டுள்ளது என்று சொன்னால் சரியல்ல. மருத்துவரின் பரிந்துரை சீட்டுஇல்லாததால் மேற்படி ஆவணங்கள் செல்லதக்கது அல்ல என்றால் சரியல்ல. இந்த விபத்து என் கவனக்குறைவால் ஏற்பட்டுள்ளதால் 2,3 எதிர்மனுதாரர்கள் இழப்பீடு கொடுக்க கடமைப்பட்டவர்கள் அல்ல என்றால் சரியல்ல. என் மனு தள்ளுபடி செய்யதக்கது என்றால் சரியல்ல.